


# வெளி



மாணவரவை
கலை பண்பாட்டுப் பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம் - இலங்கை
மட்டக்களப்பு.

# இலங்கைப் பெருந்தோட்டத் தொழிற்சங்க இயக்கங்கள்

T. கிருஷ்ணமோகன்
முதுநிலை விரிவுரையாளர்
அரசியல் விஞ்ஞானம்

## 01. அறிமுகம்

இலங்கையில் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வேலைக்காகக் கொண்டு வரப்பட்ட இந்தியத் தொழிலாளர்களின் நலன்கள், உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழிற்சங்க இயக்கங்கள் ஆரம்பமாகின. ஆயினும் ஆரம்பகாலங்களில் பெருந்தோட்டங்களில் இத் தொழிற்சங்கங்கள் இயங்குவது கடினமான சட்டங்களால் தடுக்கப்பட்டிருந்தன. இவ் அரசியல் சூழலில் பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஒன்று திரட்டி உரிமைகளுக்காகப் போராடுவதற்கு தொழிற்சங்கங்கள் முயற்சித்துள்ளன. இம் முயற்சிகள் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்காவிட்டாலும், சுதந்திரத்தின் பின்னர் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள் சுதந்திரமாக அமைக்கப்பட்டன. ஆயினும் சுதந்திரத்தின் பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பின்பற்றிய அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையினை முழுமையாகவே மாற்றியமைத்தன. பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார உரிமைகளுக்காக போராட வேண்டிய அதே நேரம் இவர்களின் குடியியல், அரசியல், உரிமைகளுக்காகவும் போராட வேண்டியேற்பட்டது. இக் கட்டுரை பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார உரிமைகளுக்காக நடாத்திய போராட்டங்களையும், விளைவுகளையும் ஆய்வு செய்கிறது.

## 02. பெருந்தோட்டத் தொழிற்சங்க முன்னோடி

பெருந்தோட்டங்களில் தொழிற்சங்கங்களை முதலில் அறிமுகப்படுத்துவதில் தீவிரமாகச் செயற்பட்டவர் கோ. நடேசையர் ஆவார். 1915 ஆம் ஆண்டு முதற் தடவையாக இலங்கை வந்திருந்த ஐயர் மீண்டும் 1920 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து "தேசநேசன்" என்னும் பத்திரிகையினை வெளியிட்டார். தொழிலாளர்களுடன் ஐயர் கொண்டிருந்த தொடர்பு அவரை அரசியலில் ஈடுபட வைத்தது. இவர் 1926 ஆம் ஆண்டு தொடக்கம் 1928 ஆம் ஆண்டு வரையில் நகரத் தொழிலாளர்களின் தலைவராகிய ஏ.ஈ. குணசிங்காவுடன் தொடர்பு கொண்டிருந்தார். 1926 ஆம் ஆண்டில் இவர்கள் இருவரும் இணைந்து **"Forward"** என்னும் பத்திரிகையினையும் வெளியிட்டிருந்தனர். குணசிங்காவுடன் தொடர்பு வைத்திருந்த காலத்தில் தொழிற்சங்க செயற்பாட்டிற்கான அனுபவத்தினை இவர் பெற்றிருந்தார். ஆயினும் இவர்களிற்கிடையிலான உறவு தொடர்ந்திருக்கவில்லை. 1928 ஆம் ஆண்டு நடேசையர், குணசிங்கா ஆகியோருக் கிடையில் முரண்பாடு ஏற்பட்டது.

குணசிங்கா, அநாகரிக தர்மபாலவுடன் இணைந்து பேரினவாதக் கருத்துக்களை முன்வைத்ததுடன், இந்திய எதிர்ப்புணர்வினையும் கொண்டிருந்தனர். 1929 ஆம் ஆண்டு ஆரம்பித்த பொருளாதார மந்தநிலை, இவர்களுக்கிடையிலான உறவில் முழுமையான பாதிப்பினை ஏற்படுத்தியது. பொருளாதார மந்தநிலை நகர்ப்புறத் தொழிலாளர்களுக்கும், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையில் முரண்பாட்டினை ஏற்படுத்தியது.

அவ்வேளையில், இலங்கையின் நகர்ப்புறத் தொழிலாளர்களுக்கிடையில் இந்திய எதிர்ப்புணர்வு அதிகரித்திருந்தது. இது பெருந்தோட்டத் தொழிலாளர் இயக்கம் தனியாக விருத்தியடைய வேண்டிய தேவையினை உருவாக்கியது. ஆயினும், தோட்டத் தொழிலாளர்களிலிருந்து தொழிலாளர் இயக்கம் உருவாகக் கூடியளவிற்கு விழிப்புணர்வோ, ஒருங்கு சேரும் பண்போ அப்போது காணப்படவில்லை. கல்வியறிவற்ற, சுரண்டப்படுகின்ற மக்கள் கூட்டத்தினர்களாகவே தொடர்ந்தும் காணப்பட்டார்கள். இந்நிலையில் இவர்களுக்கான தலைமைத்துவம் இந்திய தோட்டத் தொழிலாளர்களிலிருந்தன்றி இலங்கையிலுள்ள இந்திய மத்தியதர வர்க்கத்திலிருந்தே எழுச்சியடைய வேண்டியதாயிற்று.

1931 ஆம் ஆண்டு நடேசையர் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான தொழிற்சங்கத்தினை ஒழுங்கமைப்பதற்கான முதல் முயற்சியை மேற்கொண்டார். அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் என்ற பெயரில் இத் தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. நடேசையர் கவர்ச்சியான தலைமைத்துவ இயல்பினைக் கொண்டவர். பிராமண குலத்தில் பிறந்தவர். பத்திரிகையாளர், பேச்சாற்றல்மிக்கவர், பயமற்றவர், சக்தி வாய்ந்த தொழில் வழங்குனர்களுடன் சவால் விடக்கூடியவர், ஆங்கிலப் புலமைமிக்கவர். அதனால் பொருளாதார மந்தநிலை ஏற்பட்ட காலப்பகுதியில் வேதனம் குறைக்கப்படுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை தொழிலாளர் வர்க்கம் எதிர்த்து குரல் கொடுக்க முடியாதிருந்த போது, தொழிலாளர் வர்க்கத்தினைச் சாராத ஒருவரால் வேதனக்குறைப்பிற்கு எதிராக குரல் கொடுக்க முடிந்திருந்தது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களை விழிப்படையச் செய்யும் நோக்கில் இத் தொழிற்சங்கம் தனது கொள்கைகளை உருவாக்கியது. சகோதரத்துவத்தினை வளர்த்தல், சுய உதவி, சிக்கனம், மதுப்பழக்கத்தை தடுத்தல், சூதாட்டம், கடன்படுதல் போன்ற பழக்கவழக்கத்திலிருந்து தொழிலாளர்களை மீட்பது என்பவற்றுடன் தொழிலாளர்களின் அரசியல், பொருளாதார அந்தஸ்தினை உயர்த்துவதற்கு அவர்களின் கல்வியறிவினை மேம்படுத்துவதும் இதன் கொள்கைகளாக இருந்தன.

ஆயினும் பொருளாதாரத் தாக்கத்தினால், வேதனமானது குறைந்த மட்டத்திற்கு சென்றதுடன், வேலையில்லாப் பிரச்சினையும் அதிகரித்தது. இவற்றை தடுக்கக் கூடிய வலிமை இத் தொழிற்சங்கத்திற்கு இருந்திருக்கவில்லை. முதலாளித்துவ

ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட பெருந்தோட்டத்திற்குள் "அத்துமீறல் சட்டம்" **(Tres Pass Law)** தொழிற்சங்கச் செயற்பாட்டினை முடக்கியும் விட்டிருந்தது. **(Jeyawardene, Kumari,V, 1972 : 343)** இதனால் நடேசையரின் தொழிற்சங்கம் தோட்டங்களுக்கு வெளியிலிருந்து போராட்டங்களை நடாத்தியது.

தொழிற்சங்கங்கள் தோட்டங்களுக்குள் நுழைவது சட்டவிரோதமாகியதால், தொழிலாளர்களுக்கும், தொழிற்சங்கத்திற்கும் இடையிலான தொடர்பு பெருமளவிற்கு அருகிலுள்ள நகரங்களில் இடம்பெறும் கூட்டங்களுடாகவே ஏற்படுத்தப்பட்டது. 1931ம் ஆண்டு வைகாசி மாதம் ஹட்டனில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஏறக்குறைய 5000 தொழிலாளர்கள் ஒன்றுகூடியிருந்தார்கள். இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- வேதனக் குறைப்பிற்கு எதிராக எதிர்ப்பினைத் தெரிவிப்பது.
- குறைந்த வேதனச் சட்ட மூலத்தினை எதிர்ப்பது.
- கண்காணிகளால் நடாத்தப்படும் **Truck System** திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது. **(Jeyawardene, Kumari,V, 1972 : 344)**

## 03. நடேசையருக்கு எதிரான நடவடிக்கைகள்

இலங்கையின் முதலாளித்துவ வளர்ச்சியில் பெருந்தோட்டச் சொந்தக்காரர்கள் மிகவும் பலமுள்ள குழுவினராவர். பெருந்தோட்டத் தொழிலாளரோ, பெரும் எண்ணிக்கையிலான பாட்டாளிகளாகவும், மிகவும் சுரண்டப் படுபவர்களாகவும், ஒழுங்கமைக்கப்படாத தொழிலாளர் வர்க்கமாகவும் காணப்பட்டனர். பொருளாதாரத்தில் இவர்கள் வகிக்கும் பங்கின் நிமித்தம் அவர்கள் தோட்ட உரிமையாளர்களைப் பயமுறுத்தக் கூடிய நிலையில் இருந்தனர். இந்த ஆபத்தை உணர்ந்து கொண்ட தோட்ட உரிமையாளர்கள் தொழிற்சங்கக் கிளர்ச்சிகளால் வேகமாக தாம் நசுக்கப்படுவதனை உணர்ந்தார்கள். தம் வர்க்க நலனை பாதுகாக்கச் சில தந்திரோபாயங்களை வகுத்துக் கொண்ட தோட்ட உரிமையாளர்கள், தமக்கான சம்மேளனம் ஒன்றை உருவாக்கினர். பின்னர், நடேசையரை தனிப்பட நாடிச்சென்று சில புரிந்துணர்வுகளை தமக்குள் ஏற்படுத்த முற்பட்டனர். உதாரணமாக, கண்காணிகள், கீழ்நிலை உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதில் நடேசையரின் எதிர்ப்பினை இல்லாது செய்ய முற்பட்டதுடன், கண்காணிகளுக்கும் நடேசையருக்கும் இடையில் உறவினை ஏற்படுத்த முற்பட்டனர். ஆனால் நடேசையர் கண்காணிகள் தொடர்பான விடயத்தில் "தொழிலாளிகளின் உண்மையான எதிரிகள் கண்காணிகளே" என்றும் "ஆபிரிக்க அடிமை வியாபாரிகளை விட இவர்கள் மோசமானவர்கள்" என்று கருதுபவராகக் காணப்பட்டார்.

அதே நேரம், தொழிலாளர்களுக்கும், நடேசையருக்கும் இடையில் கசப்புணர்வினை ஏற்படுத்த தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும், பிராமணருக்கும் இடையிலான சாதிப்பாகுபாட்டினை தந்திரோபாயமாக பயன்படுத்த முற்பட்டனர். முதலாளிகள் ஒரு முனையில் நடேசையருடன் நட்புறவை வளர்த்துக் கொண்டு மறு முனையில் தொழிலாளிகள், கண்காணிகள் மத்தியில் நடேசையருக்கு எதிர்ப்பினையும், வெறுப்பினையும் ஏற்படுத்தத் திட்டமிட்டனர்.

இத் தந்திரோபாயம் முதலாளிமார்களுக்கு பலன் அளித்திருந்தது. கண்காணிமார்களில் நடேசையர் கொண்டிருந்த வெறுப்பினைப் பயன்படுத்தி கண்காணிமார்களின் அமைப்பினை தமது நலன்களுக்காக முதலாளிமார்கள் பயன்படுத்தத் தொடங்கினர். ஆயினும், உடனடியாகத் தொழிலாளர்களுக்கும், நடேசையருக்கும் இடையில் வெறுப்பினை ஏற்படுத்த முடியாமல் போனது. இதற்காக சில வேலைத் திட்டங்களைத் தோட்ட உரிமையாளர்கள் சம்மேளனம் உருவாக்கிக் கொண்டது. **((Jeyawardene, Kumari,V, 1972 : 345)**

1931 ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் தோட்ட உரிமையாளர்கள் சம்மேளனம் "நடேசையரின் செயற்பாடுகளுக்கு கடிவாளம்" என்னும் தீர்மானம் தொடர்பாக கலந்துரையாடியது. வருட இறுதியில் நடேசையருக்கு எதிரான வெளியீடுகளை பிரசுரித்துப் பிரச்சாரப்படுத்தியது.

பெருமளவிற்கு இப் பிரசுரங்கள் "சாதி உணர்வுகளை தொழிலாளர்கள் மத்தியில் உருவாக்கியதோடு, கண்காணிகள் பிராமணரான நடேசையரால் தாக்கப்படுகிறார்கள்" என்று எழுதின. இதனை விட, தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களாக இல்லாதவர்களிலிருந்தே உருவாகின்றார்கள் என்ற கருத்தினையும் வெளியிட்டது. தோட்ட உரிமையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் நடேசையரின் தலைமைத்தும் தொடர்பாகக் கூறும் போது "தானே தன்னைத் தலைவராக்கியவரது செயற்பாடுகள் தொழிலாளர்களைச் சுரண்டுவதாகவேயிருக்கும்." எனக் குற்றம் சாட்டியிருந்தார்.

தோட்ட உரிமையாளர்கள் ஊழியன் என்னும் தமிழ் பத்திரிகையினை உருவாக்கி நடேசையரைத் தாக்கத் தொடங்கினர். தொழிலாளர்களுக்கும், தோட்ட உரிமையாளர்களுக்கும் சிறப்பான புரிந்துணர்வினை ஏற்படுத்துவது என்பதை விட தொடர்ந்தேர்ச்சியாக நடேசையரைத் தாக்குவதன் மூலம் தொழிலாளர்களிட மிருந்து அந்நியப் படுத்துவதே இப் பத்திரிகையின் நோக்கமாக இருந்தது.

இத்தந்திரோபாயங்கள் எல்லாம் தோட்டத் தொழிலாளர்கள் மனதில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன. தொழிலாளர்கள் நடேசையர் மீது கோபம் கொள்ளத் தொடங்கினர். தோட்ட உரிமையாளர்களினால் பயன்படுத்தப்பட்ட இத்தந்திரோபாயங்கள் ஆரம்பிக்கப்படவிருந்த தொழிற்சங்கங்களை வேருடன் களைவதாகவும் இருந்தன. தொழிற் சங்கத்திற்குள் ஏற்பட்ட உள் முரண் பாடுகளும் தொழிற்சங்க இயக்கத்தினை பலவீனப்படுத்தின. **(Jeyawardene, Kumari,V, 1972 : 346)**

### 04. இலங்கை இந்தியக் காங்கிரஸ்

1939 ஆம் ஆண்டு நேருவின் வருகையோடு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்தியக் காங்கிரஸ் **(CIC)** இலங்கையில் வாழும் இந்தியர்களுக்காக உருவாக்கப்பட்டது என்று கூறப்பட்டாலும், அதில் தோட்டத் தொழிலாளர்களின் அங்கத்துவம் தொடர்பாக ஆழமாகச் சிந்திக்கப்பட்டிருக்கவில்லை. பதிலாக, இலங்கை இந்தியக் காங்கிரஸில் அங்கம் பெற்றவர்கள் சாதி அடிப்படையிலேயே தமது அங்கத்துவத்தினைப் பெற்றிருந்தனர்.

இலங்கையிலுள்ள பாரத் சேவா சங்கம், நாடார் மகாஜன சங்கம், பாண்டிய வேளாளர் சங்கம், ஹரிஜன சேவா சங்கம் என்பன ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டே இலங்கை இந்தியக் காங்கிரஸ்சைத் தோற்றுவித்திருந்தன. **(Nadesan 1993 : 135)** இலங்கை இந்தியக் காங்கிரஸின் தலைமைத்துவத்தில் சாதியமைப்பின் பண்புகளே பிரதிபலித்திருந்தது. லட்சுமணச் செட்டியார் முதல் தலைவராகவும், ஏ. அஸிஸ், எச்.எம். தேசாய் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், டி.எம். வேரா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களில் அக்கறை கொள்ளாத தலைவர்களாகவே இருந்தனர். இலங்கையில் வியாபாரம் செய்வதிலும், வட்டிக்கடை நடாத்துவதிலுமே அவர்களின் ஈடுபாடு இருந்தது.

இலங்கை இந்தியக் காங்கிரஸின் அங்கத்துவத்தினையும், தலைமைத்துவத்தினையும் இவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டமை, தோட்டத் தொழிலாளர்களினது அரசியல் அபிவிருத்தியிலும், சமூக அபிவிருத்தியிலும் பெரும் இடைவெளியினையும், தாக்கத்தினையும் ஏற்படுத்தியிருந்தது. இலங்கை இந்தியக் காங்கிரஸில் இணைந்திருந்த இம் மத்தியதரவர்க்க இந்தியர்களும், கடை உதவியாளர்களும் இந்திய தேசிய இயக்கத்தின் சிறப்பினை எடுத்துக் கூறி, இலங்கையிலுள்ள இந்தியர்களை உணர்ச்சியூட்டி வந்திருந்தனராயினும், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை இந்தியக் காங்கிரஸின் செயற்பாட்டில் ஆர்வம் இன்றி இருந்ததுடன், தொடர்ந்தும், நடேசையரினதும், ல.ச.ச.க யினதும் செல்வாக்கிற் குட்பட்டவர்களாகவே இருந்தனர்.

ஆரம்பத்தில் இலங்கை இந்தியக் காங்கிரஸ் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் விடயத்தில் ஆர்வம் குறைந்திருந்த போதும் தமது தொழில் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளவும், தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், தமது வாழ்க்கை நிலையினை உயர்த்திக் கொள்ளவும் தொழிலாளர்கள் ஆர்வம் கொண்டிருந்த நிலையில், இலங்கை இந்தியக் காங்கிரஸ் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் தோட்டச் சொந்தக்காரர்களுடன் பேரம் பேசுவதற்கு முற்பட்டது. தோட்டச் சொந்தக்காரர்கள் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கம் ஒன்றுடனேயே தாம் பேரம் பேசுவதற்குத் தயாராகவுள்ளதாகக் கூறி இம் முயற்சியை நிராகரித்திருந்தனர். இதனால் இலங்கை இந்தியக் காங்கிரஸின் தலைமைத்துவம், இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் யூனியன் **(CICLU)** என்ற பெயரில் தொழிற்சங்கம் ஒன்றை 1940 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் உருவாக்கிக் கொண்டது. **(Thondaman, 1994 : 5)**

பெருந்தோட்டத்திலுள்ள இளைஞர்கள், குறிப்பாகக் கண்காணிமார்களின் பிள்ளைகள் நகர்ப்புற கிறிஸ்தவப் பாடசாலைகளில் ஆங்கில மொழிக் கல்வியைக் கற்று 1930 களில் வெளியேறத் தொடங்கினர். இவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்டவர்களாக, இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் யூனியனில் இணைந்து கொண்டனர்.

இவர்களின் எழுச்சியில் அச்சம் கொண்ட இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைமைத்துவம், இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் யூனியனின் தலைமைத்துவத்தினை இலங்கை இந்தியக் காங்கிரஸ்சுடன் ஒன்றிணைத்து இலங்கை இந்தியக் காங்கிரஸின் தலைவரே இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் யூனியனின் தலைவருமாகும் எனப் பிரகடனப்படுத்தியது. இலங்கை இந்தியக் காங்கிரஸின் உள்ளூர் இணை அலுவலகங்கள் யாவும் அந்தந்தப் பிரதேச வியாபாரிகள், குட்டிப் பூர்ஷ்வாக்களின் தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

## 05. தொழிற்சங்கச் சிதைவுகள்.

1950 ஆம் ஆண்டு இலங்கை இந்தியக் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டது. இலங்கை இந்தியக் காங்கிரஸ் என்பது இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் எனவும், இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் யூனியன் என்பது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனவும் தனித்தனியாகப் பிரிந்து கொண்டன. **(Thondaman, 1994 : 73)** இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சின் தலைமைத்' துவத்தினைச் சொத்துப்படைத்த கண்காணிகளின் பிள்ளைகள் கைப்பற்றிக் கொண்டனர். **(Nadesan, 1993 : 136)**

தோட்டத் தொழிலாளர்கள் சிறப்பானதும், பலம் வாய்ந்ததுமான பேரம் பேசும் திறனும், சக்தியும் அற்றவர்களாகக் காணப்பட்டனர். பொதுவாகத் தொழிலாளர்கள் லயன்களில் வாழ்வதால், தாம் ஒன்றினைக்கப்பட்டு வாழ்வதுடன், அவர்களைச் சூழவுள்ள சிங்களக் கிராமிய மக்களுடன் இணைந்து வாழ்வதற்கு மொழி, மதம், கலாசாரம் என்பன தடையாகவும் இருந்தன. இதனால் தனிமைப்படுத்தப்பட்ட சமூக வாழ்க்கையினை இவர்கள் வாழ்ந்து வந்தனர். தொழிலாளர்களிடம் காணப்பட்ட கல்வியறிவின்மை, வறுமை, சமூக, அரசியல் தனிமைப்படுத்தல் என்பவற்றால் இவர்கள் சிறப்பான பேரம் பேசும் ஆற்றலை இழந்ததுடன், தொழிற்சங்க முகாமைத்துவ ஆளுமையினையும் இழந்திருந்தனர். இதனால் தோட்டக் கண்காணிகளின் படித்த பிள்ளைகளின் தலைமைத்துவத்தில் உருவாக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இவ் வெற்றிடத்தினை நிரப்பியதுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சினை தோட்டப் பிரதேசங்களில் பாரியதொரு தொழிற்சங்கமாக வளர்க்கவும் முற்பட்டனர். ஆயினும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட ஆளுமை முரண்பாடுகளால், அவர்களுக்கிடையில் போட்டி ஏற்பட்டதுடன், தொழிற்சங்க ஐக்கியம், ஒற்றுமை என்பன சிதைக்கப்பட்டன.

1950 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதாயினும், 1956 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களாகிய எஸ். தொண்டமான், ஏ. அஸிஸ் ஆகிய இருவருக்கும் இடையில் ஆளுமை முரண்பாடு ஏற்பட்டு தொழிற்சங்கம் இரண்டாகப் பிளவடைந்தது. ஏ. அஸிஸ் உடன் சேர்ந்து சில தொழிற்சங்கத் தலைவர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சினை விட்டு வெளியேறி ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் **(DWC)** என்ற பெயரில் புதிய தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்கிக் கொண்டனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் தமிழ் பேசும் இந்து மரபின் வழி தென் இந்தியாவிலிருந்து இலங்கை வந்திருந்த கண்காணியின் மகனும், தோட்டச் சொந்தக்காரருமாவர். ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஏ. அஸிஸ் தமிழ் பேசும் இஸ்லாமிய மரபின்வழி வந்தவரும், மேற்குப் பாக்கிஸ்தானைச் சேர்ந்தவருமாவர். தொண்டமானுக்கும், அஸீஸிசிற்கும் இடையிலான முரண்பாட்டிற்கு அரசியல் வேறுபாடு முக்கிய பங்காற்றியிருந்தாலும், ஆளுமை முரண்பாடு, தனிப்பட்ட எதிர்பார்ப்பு என்பவையும் முக்கிய பங்கு வகித்தன எனக் கூறப்படுகின்றது. அஸிஸ், தொண்டமானை விட பரந்தளவிலான அரசியல் செயற்பாட்டில் விருப்பமுடையவராக இருந்தமை, தொண்டமானின் அரசியலில் இருந்து அஸிசை ஒதுக்கிவைத்திருந்தது. அஸிஸ் சர்வதேச விவகாரங்களில் மிகவும் ஆழமாக அக்கறை கொண்டிருந்தார். குறிப்பாக மத்திய கிழக்கு அரசியல் சுதந்திர இயக்கங்களில் ஆர்வம் கொண்டிருந்தார் எனக் கூறப்படுகின்றது. **(Kerney, 1971 : 129)**

தோட்டப் பிரதேசத்தில் தீவிரமான தொழிற்சங்கமாக ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் வளர்ச்சியடைந்தாயினும், அஸிசின் தனிமனிதவாதம், ஆளுமை, தலைமைத்துவ ஆதிக்கம் போன்றவற்றால், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸில் இருந்த இடதுசாரி மனோபாவம் கொண்ட ஒரு சாரார் 1959 ஆம் ஆண்டு பிரிந்து சென்று இலங்கைப் பெருந்தோட்டத் தொழிலாளர் யூனியன் **(CPWU)** என்றதொரு புதிய தொழிற்சங்கத்தினை உருவாக்கினர். இலங்கைப் பெருந்தோட்டத் தொழிலாளர் யூனியன் கம்யூனிச கட்சியின் செல்வாக்கிற்குட்பட்டதொரு தொழிற்சங்கமாகச் செயற்பட்டதால் முதலாளித்துவ அரசாங்கங்களின் அச்சுறுத்தலுக்கு மட்டுமன்றி ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற முதலாளித்துவ தொழிற்சங்கங்களின் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக வேண்டியிருந்தது.

கம்யூனிச எதிர்ப்புணர்வினால் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றிற்கிடையில் ஏற்பட்ட தற்காலிகப் புரிந்துணர்வு கூட்டுத் தொழிற்சங்கத் தொழிற்பாட்டினை ஏற்படுத்தியிருந்தது. ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இரண்டினதும் கூட்டுச் செயற்பாடானது "புதிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்;" என்று அழைக்கக் கூடியளவிற்கு முக்கியம் பெற்றிருந்ததுடன், கூட்டுச் செயலகத்தின் பிரதான நோக்கம் தோட்டப் பிரதேசங்களில் இடதுசாரிகளைத் தோற்கடிப்பதாகவே இருந்தது.

துரதிஷ்டவசமாக முதலாளித்துவத் தொழிற்சங்கங்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டிய இலங்கைப் பெருந்தோட்டத் தொழிலாளர் யூனியனின் அமைப்பிற்குள் ஏற்பட்ட தலைமைத்துவ முரண்பாட்டினால், சில தலைவர்கள் இலங்கைப் பெருந்தோட்டத் தொழிலாளர் யூனியனில் இருந்து விலகி மீண்டும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து கொண்டனர். 1965 ஆம் ஆண்டு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குள் தலைமைத்துவப் பிரச்சினை மீண்டும் ஏற்பட்டது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சின் பொதுச் செயலாளரும், 15 மாவட்டப் பிரதிநிதிகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்சை விட்டு வெளியேறி தொழிலாளர் தேசிய யூனியன் **(National Union of Workers - NUW)** என்ற பெயரில் புதிய தொழிற்சங்கத்தினை உருவாக்கியிருந்தனர்.

**06. அரசியல் மயவாக்கம்**

இலங்கை அரசியலில் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களின் செயற்பாடானது, தோட்டத்தொழிலாளர்களின் கோரிக்கைகளை அரசியல் செய்முறையில் இணைத்துச் செல்கின்ற ஒரு கருவியாகவுள்ளது. அதே நேரம், அதிகாரப் போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவினைப் பெற்று வெற்றி பெறுவதற்காக அரசியல் கட்சிகள், பயன்படுத்தும் துணை நிறுவனங்களாகவும் தொழிற்சங்கங்கள் உள்ளன. பெரும்பாலான பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் தமது கொள்கைகளில் சாத்தியமானவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக அரசியல் கட்சிகளுடன் இணைந்தே செயற்படுகின்றன. அதாவது அரசியல் கட்சிகளுக்கும் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான உறவுகள் பரஸ்பர நன்மைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றின் அடிப்படையிலேயே உருவாக்கப்படுகின்றன. தொழிற்சங்க இயக்கத்தின் முக்கிய இயல்பாக இப்பண்பே காணப்படுகின்றது.

பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தினை ஒழுங்கமைக்கவும், சட்டவிதிகளை விளங்கிக் கொள்ளவும், பேரம் பேசவும் உறுதியானதும், நிலையானதுமான பயன்மிக்க தலைமைத்துவத்தினை எதிர்பார்க்கின்றனர். இந்த இடைவெளியை நிரப்புவதற்கு அரசியல் கட்சிகள் முயற்சி செய்கின்றன. அரசாங்க நிறுவனங்களுக்கும் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம், தொழிற்சங்கத்தின் கொள்கைகளை அரசியல் கட்சிகள் முன்னெடுத்துச் செல்கின்றன. இதனால் பெருந்தோட்டத் தொழிற்சங்க இயக்கம் என்பது, அரசியல் கட்சிச்செல்வாக்குடைய தொழிற்சங்கங்களின் உருவாக்கமாகவே விரிவடைந்து சென்றுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள், ல.ச.ச.க, க.க, ஐ.தே.க போன்ற அரசியல் கட்சிகளில் ஏதாவது ஒன்றுடன் இணைந்தே செயற்படுகின்றன. ஐ.தொ.கா, இ.தொ.கா ஆகிய தொழிற்சங்கங்களும் தமது அரசியல் தேவை கருதி ஐ.தே.க வுடன் காலத்திற்குக் காலம் ஒன்று சேர்ந்து செயற்பட்டு வருகின்றன. சில தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளுக்குச் சொந்தமான தொழிற்சங்கங்களாக இருப்பதுடன், இத் தொழிற்சங்கங்களின் கொள்கைகள் அரசியல் கட்சிகளால் தீர்மானிக்கப்பட்டுமிருந்தன.

ஐ.தே.க பெருந்தோட்டப் பிரதேசங்களில் தமது அரசியல் செல்வாக்கினைப் பலப்படுத்திக் கொள்வதற்காக இலங்கை மக்கள் தோட்டத் தொழிலாளர் யூனியன் **(LJEWU)** என்னும் தொழிற்சங்கத்தினை உருவாக்கியது. மேலும், கம்யூனிசக் கட்சி தொழிலாளர் யூனியன் என்னும் தொழிற்சங்கத்தினையும், பீக்கிங்சார்பு

கம்யூனிசக் கட்சியும் றொட்ஸ்கி சார்பு லங்காசமசமாஜக் கட்சி, இலங்கைத் தோட்டத் தொழிலாளர் யூனியன் **(LEWU)** என்னும் தொழிற்சங்கத்தினையும், உருவாக்கியிருந்தன.

பெரும் தொழிற்சங்கங்கள் ஆளும் சிங்கள அரசியல் கட்சிகளுடன் இணைந்து கொள்வதன் மூலம், தேசியமட்ட அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதுடன், அரசாங்கத்தினைத் தீர்மானிக்கும் சக்தி பொருந்தியனவாகவும் காணப்படுகின்றன. இலங்கை மக்கள் தோட்டத் தொழிலாளர் யூனியனைப் பொறுத்தவரை ஐ.தே.க வின் தொழிற் சங்கமாகச் செயற் படுகின்றமையினால், தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பது, ஐ.தே.க வின் ஆட்சிப்பலத்தினைத் தீர்மானிப்பது என்ற இரண்டு பரிமாணங்களுக்கிடையிலும் பெரும் முரண்பாடுகள் நிலவுகின்றன. தொழிலாளர்கள் ஐ.தே.க விற்கு வழங்கும் கீழ்படிவு என்பதே இலங்கை மக்கள் தோட்டத் தொழிலாளர் யூனியனின் தொழிற்சங்கத் தலைமைத்துவத்திற்கு முதன்மையானதாக இருந்தது. தொழிலாளர்களும், அவர்களின் நலன்களும் பல சந்தர்ப்பங்களில் கட்சி நலன்களுக்காகக் கைவிடப்பட்ட நிலையிலிருந்தன. ஆயினும், ஐ.தே.க அரசாங்கக் காலத்தில் இலங்கை மக்கள் தோட்டத் தொழிலாளர் யூனியனின் மூலம் அதிக நன்மைகளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை தொழிலாளர்களுக்கு இருந்தது. இதனால், 1982 ஆம் ஆண்டு காலப்பகுதியில், வேறு தொழிற்சங்கங்களை விட்டுத் தொழிலாளர்கள் இலங்கை மக்கள் தோட்டத் தொழிலாளர் யூனியனில் இணையத் தொடங்கியிருந்தனர். இது தொடர்பாகக் கங்காணி ஒருவர் கூறும் போது, "ஐ.தே.க வின் தொழிற்சங்கத்தில் இணைவதன் மூலம், தொழிலாளர்கள் சில நன்மைகளைப் பெறமுடிந்தது. ஏனெனில், அது ஆளும் ஐ.தே.க வின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற்சங்கமாகும். புதிய விடுதிகள், பிள்ளைகளுக்கான பிறப்புச்சான்றிதழை இலகுவாகப் பெற்றுக் கொள்ளுதல், கண்காணி உத்தியோகத்தினைப் பெற்றுக் கொள்ளக்கூடியமை, சிறப்பான தண்ணீர் வசதி, புதிய மலசல கூடங்கள் போன்ற வசதிகளைப் பெறமுடியும் எனத் தொழிலாளர்கள் நம்பினார்கள். இத் தொழிற்சங்கத்தில் சேர்ந்து கொள்வதன் மூலம் தமது வாழ்க்கை நிலையினை உயர்த்திக் கொள்ள முடியும் என்றும் தொழிலாளர்கள் நம்பினார்கள். இந் நன்மைகளை ஐ.தே.க வின் தொழிற்சங்கத்தினால் மட்டுமே பெற்றுத்தர முடியும் என நம்பியதால், தொழிலாளர்கள் தமது அங்கத்துவத்தினை மாற்றிக் கொண்டனர். இ.தொ.க, தொழிலாளர் தேசிய யூனியன் போன்ற தொழிற்சங்கங்களில் சேர்ந்தால் இந் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. தொழிலாளர்கள் இ.தொ.கா வுடன் சேர்ந்திருந்தால் தமது பிள்ளைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது ஏனைய தொழிற்சங்கங்கள் எதனையும் செய்வதில்லை."
**(ஆதாரம் : Hollup Oddvar, 1994 : 197)** எனக் கூறியிருந்தார்.

ஆரம்பகாலத்தில் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களிடையே இடதுசாரி, வலதுசாரி கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட மோதல்கள் காணப் பட்டனவாயினும், இடது சாரிகளின்

கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் மோதல்களின் வேகத்தினைக் குறைத்திருந்தது. பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களுக்குத் தலைமை தாங்கிய இடதுசாரி, வலதுசாரி, தொழிற்சங்கத் தலைவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தேசிய அரசியலில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார்கள். இதனால், தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களின் நலன்களில் கவனம் செலுத்துவது என்பதைவிட, தேசிய அரசியலில் தாம் ஈடுபட்டுக் கொள்வதற்கான கருவிகளாகத் தொழிற்சங்கங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். இதனால், அரசியல் கட்சிகளின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற் சங்கங்களும், மறைமுகமாக அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கும் தொழிற்சங்கங்களும், பதவிக்கு வரும் அரசாங்கங்களில் பங்குதாரராகும் தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளின் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முன்னிலை அமைப்புக்களாக மாற்றமடைந்து வருகின்றன.

அரசியல் கட்சிகள் நடாத்தும் **"அதிகாரப் போராட்டத்தில்"** தொழிற்சங்கங்கள் பங்கெடுப்பதனால், அரசியல் கட்சிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொழிற்சங்கங்களுடாகத் தொழிலாளர்கள் மீது செல்வாக்கும், கட்டுப்பாடும் செலுத்தும் சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன. பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் நலன்களுக்காக செயற்படுவது என்பதைவிட, மத்தியதர வர்க்கத் தொழிற்சங்கத் தலைவர்களின் எதிர்கால அரசியல் இலாபம் கருதியே உருவாக்கப்படுகின்றன. இதன் விளைவாக, தொழிற்சங்கங்கள் தொழிலாளர்கள் சார்பில் தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகள், உரிமைகள் தொடர்பாகத் தோட்ட உரிமையாளர்களுடன் பேரம் பேசுவதிலிருந்து விலகி, அரசியல் இலாபம் கருதி அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைக் கொடுக்கின்ற அமுக்கக் குழுக்களாக மாறிவருவதுடன், தொழிற்சங்கங்களுக்குரிய அதிகாரமும், செயற்பாடும் மட்டுப்படுத்தப்பட்டு, மழுங்கடிக்கப்படுகின்றன. வெவ்வேறு தொழிற்சங்கங்களுக்கும், அதன் தலைவர்களுக்கும் இடையிலான போட்டியும், அரசியல் இலாபம் கருதும் சிந்தனைகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தடுத்து நிறுத்துவதுடன், குழப்பியும் விடுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களின் சுதந்திரமான, யதார்த்தமான செயற்பாட்டிற்கும், போராட்டத்திற்கும் அப்பால் அரசியல் கட்சிகளுடன் இணைந்து தொழிற்சங்கங்கள் செயற்படுவதனால் தோட்டத் தொழிலாளர்களின் யதார்த்தமான பிரச்சினைகளுக்கு அரசியல் வியாக்கியானம் கொடுத்து, தோட்ட உரிமையாளர்களாலும், அரசாங்கத்தினாலும் தொழிலாளர்களும், அவர்களின் போராட்டங்களும் நசுக்கப்படுகின்றன. அத்துடன், தொழிற் சங்கங்களுக்கிடையே தலைமைத்துவப் பிரச்சினைகளும், தொழிற்சங்கச் சிதைவுகளும் ஏற்பட்டு, பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களின் ஐக்கியமும், ஒற்றுமையும் சிதைக்கப்படுகின்றன.

## 07. தொழிற் சங்கங்களின் அரசியற் செயற்பாடு

பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் யாவும், அரசியல் கட்சிகளின் எதிர்கால அரசியல் நோக்கம் கருதி உருவாக்கப்பட்டனவேயன்றி, தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி உருவாக்கப் படவில்லை. இதனால் தொழிற் சங்கங்களிடையே தலைமைத்துவப் பிரச்சினைகளும், தொழிற்சங்கச்சிதைவுகளும் ஏற்பட்டுப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டதுடன், அவர்களின் ஒற்றுமையும் சிதைக்கப்பட்டது. இதன் விளைவாக, தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் நலன்புரிச் செயற்பாடுகள், உரிமைகள், தொடர்பாகத் தோட்ட உரிமையாளர்களுடன் பேரம் பேசுவதிலிருந்து விலகி, அரசியல் நோக்கம் கருதி அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைக் கொடுக்கின்ற அமுக்கக் குழுக்களாக மாறியதுடன், தொழிற்சங்கங்களுக்குரிய அதிகாரமும், செயற்பாடும் மட்டுப்படுத்தப்பட்டு, மழுங்கடிக்கப்பட்டன. வெவ்வேறு தொழிற்சங்கங்களுக்கும், அதன் தலைவர்களுக்கும் இடையிலான போட்டியானது, பல்வேறு சந்தர்ப்பங்களில் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களின் கூட்டு வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தடுத்ததுடன், குழப்பியுமிருந்தது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களின் சுதந்திரமான, யதார்த்தமான செயற்பாட்டிற்கும், போராட்டத்திற்கும் அப்பால் அரசியல் கட்சிகளுடன் இணைந்து தொழிற்சங்கங்கள் செயற்பட்டதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் யதார்த்தமான பிரச்சினைகளுக்கு அரசியல் வியாக்கியானம் கொடுத்து, தோட்ட உரிமையாளர்களாலும், அரசாங்கத்தினாலும் தொழிலாளர்கள் நசுக்கப்பட்டனர். அரசியல் நோக்கங்களுக்காக ஐ.தே.க வின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கை மக்கள் தோட்டத் தொழிலாளர் யூனியனுடன் இணைந்து இ.தோ.கா அரசியல் நோக்கங்களுக்காகத் தொழிற்சங்கச் செயற்பாடுகளைப் பயன்படுத்தியிருந்தது. பொதுவாக ஐ.தே.க தனது அரசியல் நோக்கங்களுக்காகத் தொழிற்சங்கங்களின் சுதந்திரமான செயற்பாடுகள் மீது தலையீடு செய்கின்ற கொள்கையினைப் பின்பற்றி வந்துள்ளது. இ.தோ.கா தனது அரசியல் செயற்பாட்டின் உச்சத்தினை, 1977 ம் ஆண்டு ஐ.தே.க அரசாங்கத்தில், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் பதவியை எஸ். தொண்டமான் பெற்றுக் கொண்டதன் மூலம் வெளிப்படுத்தியிருந்தது. இது தொடர்பாக இ.தோ.கா வின் நியாயப்பாட்டினை எஸ். தொண்டமான் பின்வருமாறு வெளிப்படுத்தியிருந்தார்.

"இ.தோ.கா வின் அக்கறை எமது பொதுவான பிரச்சினையாகிய கூலிப் போராட்டத்திற்குத் தீர்வு காண்பது மட்டுமல்ல எங்களுடைய உரிமைகளை அமைச்சரவை மட்டத்திற்குக் கொண்டு செல்வதுமாகும்." **(மேற்கோள் : Kurian Rekel, 1982 : 89)**

உண்மையில் ஐ.தே.க அரசாங்கமானது இ.தோ.கா தலைவருக்கு அமைச்சர் பதவி வழங்கியதன் மூலம், தனது எதிர்கால அரசியல் நலன்களுக்கான அடித்தளத்தினை இ.தோ.கா ஊடாகத் தோட்டப் பிரதேசங்களில் ஏற்படுத்தியிருந்தது. இதன் மூலம் உச்ச நன்மைகளை ஐ.தே.க 1994 ஆம் ஆண்டு

வரை பெற்றிருந்தது. 1994 ஆம் ஆண்டின் பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி **(PA)** அரசாங்கத்தில் இணைந்து அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணி தனது எதிர்கால அரசியல் நன்மைகளைத் தோட்டப் பிரதேசங்களில் பெற்றுக் கொண்டது.

தோட்டப் பிரதேசங்களிலுள்ள பெரும் தொழிற்சங்கமாகிய இ.தோ.கா காலத்திற்குக் காலம் பதவிக்கு வரும் அரசாங்கங்களுடன் சமரசத்தினை ஏற்படுத்தி, அமைச்சர் பதவியைப் பெற்று, அரசாங்கத்தின் பங்குதாரர்களாக மாறிவரும் தந்திரோபாயத்தினைக் கையாளுகின்றது. அரசாங்கத்தின் பங்குதாரர் என்ற வகையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தொழிலாளர்களின் யதார்த்தமான கோரிக்கைகளை அது விட்டுக் கொடுத்து வந்துள்ளது. அரசாங்கங்களுடன் பங்குதாரர்களாவதன் மூலம் இரண்டு வகை நன்மைகளை இ.தோ.கா அரசாங்கங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தல்.

தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தொழிற்சங்கப் போராட்டங்களை நடாத்தாமல் விடுவதன் மூலம், தொழிற்சங்கப் போராட்டத்தால் ஏற்படக் கூடிய நஷ்டத்திலிருந்து அரசாங்கத்தினைப் பாதுகாத்தல். இதற்கான வெகுமதிகளாக அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொள்கின்றது.

### 08. அரசியல் மயவாக்கத்தின் நோக்கம்

இதிலுள்ள தந்திரோபாய நுட்பங்களை அவதானிக்க வேண்டும். அரசாங்கமும் தொழிற்சங்கத்தினை உருவாக்குகின்றது. அதே நேரம் பெரும் தொழிற்சங்கமாகிய இ.தோ.கா வும் அரசாங்கத்துடன் இணைந்தே செயற்படுகின்றது. பிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்தித் தொழிற்சங்கத் தலைமைத்துவத்தையும், தொழிலாளர்களையும் பிரித்து வைத்து அரசாங்கம் அரசியல், பொருளாதார நன்மைகளைப் பெற முயற்சிக்கின்றது. அரசாங்கத்திற்குத் தோட்ட முகாமைத்துவத்தினை எதிர்ப்பது என்பது தேசிய வருமானத்தில் பெரும்பகுதியை இழப்பதற்குச் சமனானதாகும். தோட்ட முகாமைத்துவத்தினை எதிர்த்து எவ்வித சலுகைகளையும், நன்மைகளையும் தொழிலாளர்களுக்கு வழங்க அரசாங்கம் முன்வருவதில்லை. அத்துடன், அரசாங்கச் சார்பற்ற தொழிற்சங்கங்களால் தோட்ட முகாமைத்துவத்திற்குக் கொடுக்கப்படும் அழுத்தத்தினால், ஏற்படக்கூடிய பொருளாதார நஷ்டங்களிலிருந்து, தோட்ட முகாமைத்துவத்தினைப் பாதுகாக்கக்கூடிய தந்திரோபாயங்களையே அரசாங்கம் வகுக்கின்றது. இதன் ஒருவடிவமே, பெரும் தொழிற்சங்கங்களை ஆட்சியின் பங்குதாரர்களாக அரசாங்கம் மாற்றிவிடுவதாகும். இந் நிலையில் அரசாங்கம், தோட்ட முகாமைத்துவம், தொழிற்சங்கம் என்பவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒருமித்த கருத்துடைய வர்களாகிவிடுகின்றனர். தொழிலாளர்கள் மட்டும் தனிமைப்படுத்தப் படுகின்றார்கள்.

09. முடிவுரை

இலங்கைப் பெருந்தோட்டத் தொழிற்சங்க வளர்ச்சியில் சமூகப் பொருளாதார அரசியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன. கோ. நடேசையர் பெருந்தோட்டத் தொழிற்சங்கத்தின் முன்னோடியாகக் கருதப்படுகின்றார். அவரின் பின்னர் கண்காணிகளின் பிள்ளைகள் தொழிற்சங்கத் தலைவர்களாக மாறியுள்ளனர்.

இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றில், தொழிற்சங்கத் தலைவர்கள் தேசியவாதிகளாகவும், சமூகச் சீர்திருத்தவாதிகளாகவும், நிலவுடமையாளர்களாகவும், சொத்துப் படைத்தவர்களாகவும், மத்தியதரவர்க்க, தொழில்சார் பல்கலைக்கழகக் கல்வியைக் கற்ற புத்தி ஜீவிகளாகவும் இருந்துள்ளனர். இப்பண்புகள் அண்மைக் காலம்வரை தொடர்ந்திருக்கின்ற செய்முறையாகவே உள்ளது. தொழிற்சங்கவாதிகள் என்ற நிலையில், நீண்ட காலத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்களில் ஒருவராகவோ அல்லது தொழில்சார் பண்பின் அடிப்படையில் தொழிலாளர்களின் அங்கத்தவர்களாகவோ மாறியிருக்கவில்லை. காலனித்துவ காலத்திலிருந்து தொழிற்சங்கங்களில் இப்பண்பு வளர்வதற்கான சமூக, கலாசார சூழ்நிலைகளே தோற்றுவிக்கப்பட்டிருந்தன.

தொழிலாளர்களின் கல்வித்தரம் குறைவாக இருந்தமை தொழிற்சங்கத் தலைமைத்துவத்தில் புத்திஜீவிகள், சொத்துப்படைத்தவர்களின் ஆதிக்கம் நீடித்திருந்தமைக்குப் பிரதான காரணமாகும். தொழிலாளர்கள் சிறப்பான கல்வி வசதியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இலவசக் கல்விமுறை காலனித்துவக் காலத்திலிருக்கவில்லை என்பதுடன், சொத்துடைய நிலச்சுவாந்தர்களினாலேயே பணம் செலவழித்து மேலை நாடுகளுக்குச் சென்று கல்வியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. தொழிலாளர்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட நிலைமை கல்விகற்ற, சொத்துடைய மத்தியதரவர்க்கச் சமூகத்தின் மீது தொழிலாளர்கள் தங்கியிருக்க வேண்டிய கட்டாயத்தினை ஏற்படுத்தியது. குறைந்தளவு கல்வித் தரத்தை அல்லது, கல்வியே கற்காத தொழிலாளர்களால் அரசாங்கச் சட்டங்கள், நிர்வாகக் கட்டளைகள், கூட்டுப் பேரம் பேசுதல் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகள், தொழிலாளர்கள் உரிமைகள் போன்றவற்றைச் சுயமாக விளங்கிக் கொள்ளல் கடினமானதாக இருந்தது. அத்துடன், இலங்கை மக்களின் வாழ்க்கையுடன் கலந்திருந்த ஆங்கில மொழிச் செல்வாக்கும், கலாசாரமும் தொழிலாளர்களின் சமூக வாழ்க்கைக்கும் மத்தியதர வர்க்கத்தினரின் சமூக வாழ்க்கைக்கும் இடையில் இடைவெளியையும் ஏற்படுத்தி இருந்தது.

அரசாங்க, தனியார் தொழில் ஸ்தாபனங்களின் ஆவணங்களும், பதிவுகளும், தொடர்பாடல்களும் 1956 ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழியிலேயே பேணப்பட்ட நிலைமை, இயல்பாகவே இலங்கையின் வறிய சுதேசிய மக்களுக்கும், ஆங்கில மொழி கற்ற மத்தியதர வர்க்கத்தினருக்கும் இடையில் பெரும் இடைவெளி ஏற்படக் காரணமாயிற்று.

எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களும் தமக்கான தலைமைத்துவத்தினை மத்தியதர வர்க்கத்திலிருந்தே எதிர்பார்த்து நிற்க வேண்டியேற்பட்டது. சமூக ரீதியாக ஏற்பட்ட இந்த இடைவெளி தொழில்சார் மத்தியதர வர்க்கத்தினரையும், மத்தியதர வர்க்க பணிக்குழுவினரையும் வேறுபடுத்திக் காட்டியிருந்தது. சமூக அந்தஸ்தில் உயர்ந்த நிலையிருக்கும் மத்தியதர வர்க்கப் பணிக்குழுவினரின் கீழ் தொழில் புரியும் தொழிலாளர் வர்க்கம் தமது சக்தி வாய்ந்த உரிமைகளுக்காக அவர்களுடன் தொடர்பு கொள்வதும், உரிமைகளைப் பெற்றுக் கொள்வதும் கடினமானதாகவே இருந்தது. இது தொடர்பாக 1961 ஆம் ஆண்டு தேசிய வேதனக் கொள்கை ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில், "தொழிற்சங்க அங்கத்தவர்கள் தொழிலாளர்களாக இருப்பதால், தொழில் வழங்குபவர்களுடன் பேரம் பேசுவதற்குத் தொழிலாளர்களாக இல்லாத வெளியாரைத் தேடுவது அவசியமானதாகவுள்ளது. பேரம் பேசுவதற்கு உகந்த சூழ்நிலை பொதுவாகக் காணப்பட்டாலும், தொழில் வழங்குபவர்களுடன் சமமாக இருந்து பேரம் பேசுவது கடினமானதாகவுள்ளது. தொழில் வழங்குபவர்கள், தொழிலாளர்கள் மீது நேரடிக் கட்டுப்பாட்டினையும், அதிகாரத்தினையும் நாளாந்த வேலையின் போது செலுத்துபவர்களாகும்." (**மேற்கோள் : Kerney, 1971 : 44**) எனக் குறிப்பிட்டிருந்தமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

தொழிலாளியாக இல்லாத ஒருவர் தொழிற்சங்கத் தலைமைத்துவப் பொறுப்பினைத் திறமை, சேவை மனப்பான்மை போன்றவற்றால் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதையும் விட, தொழிற்சங்கச் செயற்பாட்டிற்காகக், குறிப்பாக வேலை நிறுத்தம் அல்லது ஏனைய முரண்பாடுகளின் போது அவர் வழங்கும் நிதி உதவிக்காகவே தலைமைத்துவப் பொறுப்பினைப் பெற்றுவிடுகின்ற தன்மை காணப்படுகிறது. இலங்கையின் தொழிற்சங்கங்களுக்குரிய இப் பொதுப்பண்பு பெருந்தோட்டங்களைத் தளமாகக் கொண்டு செயற்படும் எல்லாத் தொழிற்சங்கங்களிற்கும் பொதுவானதாகும்.

## BIBLIOGRAPHY


01. Hollup Oddvar, 1994, Bonded Labour, Cast and Cultural Identity among Tamil Plantation Workers in Sri Lanka, Sterling Publishers, Private Limited, New Delhi.
02. Jayawardene Kumari Visakha, 1972, The Rice of the Labour Movement in Ceylon, Duke University Press.
03. Kearney Robert N, 1971, Trade Unions and Politics in Ceylon, University of California Press.
04. Kurian Rekel, 1982, Women Workers in Sri Lanka Plantation Sector, ILO, Geneva.
05. Nadesan S, 1993, A History of the UP – Country Tamil People in Sri Lanka, A Nandalala Publication, Sri Lanka.
06. Thondaman S, 1994, Tea and Politics, An Auto Biography, my Life and Times, Vol. 2, Navarang and Vijitha Yapa book shop, Colombo.